செ.வெ.எண் : 41 / செ.ம.தொ / 2023 நாள் : 21.02.2023

# செய்திக் குறிப்பு

-------------

## தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திருச்சிராப்பள்ளி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு.

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள வட்டார இயக்க மேலாளர் பணி மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் பணி ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது.

எனவே இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் வருகின்ற 24.02.2023 அன்றுக்குள் விண்ணப்பிக்கலாம்.

**<u>இப்பணிக்கான தகுதிகள் கீழ்க்காணுமாறு:-</u>**

| வட்டார இயக்க மேலாளர் பதவிக்கான தகுதிகள் : | | |
|---|---|---|
| 1 | கல்வித்தகுதி | ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>1. குறைந்தது 6 மாத காலத்துடன் MS - Office தகுதிச் சான்றிதழ்படிப்பு.<br>2. கணினி அறிவியல் அல்லது கணினி பயன்பாட்டியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை. |
| 2 | வயது | 28 வயதிற்க்குட்பட்டவர்கள் |
| 3 | அனுபவம் | குறைந்தது 3 வருடம் |
| 4 | இடம் | திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். |
| 5 | ஊதியம் பிரதி மாதம் | ரூ.15000/- |
| | விதி தளர்வுகள் | பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யப்படுபவர்கள் அதிகபட்சமாக 1/3 காலிப்பணியிடங்கள் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு 3 வருட பணி அனுபவம் மற்றும் 80% செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் விதி தளர்வுகள் வழங்கப்படும். (மேற்குறிப்பிட்ட தளர்வுகள் மூலம் விண்ணப்பிப்பவர்களுக்கு 40 வயது வரை உள்ளவர்களுக்கு பொருந்தும்) |

| வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தகுதிகள் : | | |
|---|---|---|
| 1 | கல்வித்தகுதி | ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 6 மாத காலத்துடன் MS - Office தகுதிச் சான்றிதழ் படிப்பு |
| 2 | வயது | 28 வயதிற்க்குட்பட்டவர்கள் |
| 3 | அனுபவம் | குறைந்தது 2 வருடம் |
| 4 | இடம் | சொந்த வட்டத்திற்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். |
| 5 | ஊதியம் பிரதி மாதம் | ரூ.12000/- |

மேற்படி தகுதி உள்ள நபர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள்:- 24.02.2023

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி** :-

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியரக வளாகம், திருச்சிராப்பள்ளி என்ற முகவரியிலும், மேலும் விபரங்களுக்கு **மின்னஞ்சல் முகவரி**:- dpiu_trc@yahoo.com
**தொலைப்பேசி எண்**:-0431-2412726 என்ற தொலைப்பேசி எண்ணிலும் தொடர்புக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப் குமார்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**